## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் நிருவாக உட்கட்டமைப்புக்களைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 2013

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் நிருவாக உட்கட்டமைப்புக்களைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கினங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் (ஜீஓஎஸ்எல்) அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 நவம்பர் 11 ஆம் திகதிய 711 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் படி அமுலாக்கப்படுகின்றது. இந்த அறிக்கை உயர்கல்வி அமைச்சினால் அமுலாக்கப்படும் மூன்றாம் நிலைக்கல்வியைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை மாத்திரம் கொண்டுள்ளது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் நிருவாக உட்கட்டமைப்புக்களைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, உயர்கல்வி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கும் முகவராகும். நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன: ஐந்து உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், இரண்டு பல்கழைக்கழகங்களில் இரண்டு விடுதிகள் மற்றும் இரண்டு பல்கழைக்கழகங்களில் இரண்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை நிர்மாணித்தல், மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களிலுள்ள அந்த நிறுவனங்களிற்கான அவசிய உபகரணங்களை வழங்குதல் என்பனவாகும்.

பின்னர் மீதியான நிதியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைப் பல்கலைக்கழகங்களில் இரண்டு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக 2010 நவம்பர் 11 இல் குவைத் நிதியத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

கடன் உடன்படிக்கையின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,400 மில்லியனாக இருப்பதுடன் அதில் ரூபா 1,750 மில்லியன் அல்லது 76.08 சதவீதம் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் தனது நடவடிக்கைகளை 2005 செப்தெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2012 யூன் 15 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்தநிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் செயற்திட்டத்திற்கு அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பொறுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள்

முதலியவற்றின் நம்பகத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள், கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது கடந்த ஆண்டின் கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் தீருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்,

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுற்குகிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) நிகழ்ச்சித்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013

திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஸ்) அவை கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(ஈ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிச் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட செலவினம் ரூபா 55 மில்லியன் தொகையானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,094.4 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| புதிய கட்டிடங்களின் நிர்மாணம் | 47.4 | 32.8 | 1,867.7 |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | 0.1 | இல்லை | 105.4 |

| | | | |
|---|---|---|---|
| உசாத்துணைச் சேவைக் கட்டணங்கள் | 0.5 | 0.1 | 67.1 |
| செயற்திட்ட ஒருங்கிணைப்பு | 7.0 | 8.6 | 54.2 |
| மொத்தம் | 55.0 | 41.5 | 2,094.4 |

## 5. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிப் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரையான நிதிப் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|
| | கேடீ மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | கேடீ மில் | ரூபா மில் |
| குவைட் நிதியம் | 4.02 | 1,750 | 20 | 20 | 4.00 | 1,742 |
| ஜீஓஎஸ்எல் | - | 650 | 35 | 35 | | 352 |
| மொத்தம் | | 2,400 | 55 | 55 | | 2,094 |

2007 முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது 14 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்புக் கோரல்களான ரூபா 187,473,743 தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நிலுவையாகக் காணப்பட்டன, ஆதலால் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் இல. அரச பங்களிப்பிலிருந்து மேலதிகக் கிரயம் ஏற்கப்பட்டமையை குறிக்கின்றது.

### 5.2 பௌதீகச் செயற்பாடு

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட சிவில் வேலைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| கூறு | நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அலகுகள் (எண்ணிக்கை) | மதிப்பீட்டுக் கிரயம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்கப்பட்ட கிரயம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீகச் செயற்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| சிவில் வேலைகள் | | | | |
| ஏரீஜ கட்டிட நிர்மாணிப்பு | 05 | 585,000,000 | 679,919,659 | 100 |
| யாழ்ப்பாண மற்றும் உறுகுணுவில் பல்கலைக்கழகங்களுக்கான விடுதிக் கட்டிடங்கள் | 02 | 787,000,000 | 870,186,181 | 100 |
| கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விடுதிக் கட்டிடம் | 01 | 182,000,000 | 47,440,977 | 10 |
| தகவல் தொழில்நுட்பக் கட்டிடங்கள் | 02 | 171,000,000 | 195,363,423 | 100 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கான ஏனைய கட்டிடங்கள் | 02 | 67,000,000 | 74,829,390 | 100 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விடுதிக் கட்டிடங்களின் நிர்மாணிப்பு வேலைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காண்பித்தது.

(ஆ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெரும்பாலான சிவில் வேலைகளை நிறைவேற்றியிருந்தது. எவ்வாறெனினும், அதன் மீது ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ஆரம்ப கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளைப் பார்க்கிலும் குறிப்பிடத்தக்க அளவு உயர்வாகக் காணப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்களின் முகாமைத்துவம்

(ஆ) செலவினத்தின் மீளளிப்பு